16th March 1966]

திரு. சோ. ஆறுமுகம்: தோட்ட வேலைகளில் இப்படிப்பட்ட ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று சொன்னார்கள். தோட்ட வேலைகளில் அமருவதற்கு என்னென்ன தகுதி பெற்றிருக்க வேண்டும்? எந்த அடிப்படையில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுவரை யாரும் இதனால் வேலையில்லாமல் போகவில்லை என்று குறிப்பிட்டேன். இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி, வேறு பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கு இடமில்லை என்றால், தோட்ட வேலையில் சேர்ந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தகுதிக்கு ஏற்றபடி பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். முருகையன்: அவர்களை ஹையர் கிரேட் ஆசிரியர்களாக நியமிப்பதற்குக் குறுகிய காலப் பயிற்சி ஏதாவது கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஹையர் கிரேட் ஆசிரியர் பயிற்சிக்குக் குறுகிய காலப் பயிற்சி என்பது போதாது.

வாணிப இயல் ஆசிரியர்கள்

* 314. கேள்வி—திரு. பி. முருகையன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் செகரட்டேரியல் பிரிவில் வேலை பார்க்கும் Commercial Instructor (Higher Grade) சுருக்கு எழுத்துப் பயிற்சி பெற வேண்டும் என்ற சர்க்கார் விதியினைத் தளர்த்தும் நோக்கம் பரிசீலனையில் உள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சுருக்கெழுத்துப் பயிற்சி பெறாதவர்களையும் Commercial Instructor களாக நியமிக்கலாம். ஆகவே விதியினை தளர்த்த வேண்டிய அவசியமில்லை.

திரு. பி. முருகையன்: தலைவர் அவர்களே, இவ்வாறு விதிகளைத் தளர்த்தும்போதும், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று பே கமிஷன் அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த மாதிரி தகவல் ஒன்றுமில்லை.

பள்ளிக் கண்காணிப்பாளர்கள்

* 315. கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் வட்டக் கண்காணிப்பாளர்களாக (Deputy Inspectors of Schools) வேலை செய்யும் ஆண், பெண் இருபாலர்கள் எத்தனை பேர்?

(இ) இதில் ஹரிஜனங்கள் தனித்தனியே எத்தனை பேர்?